வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 14.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மற்றும் நாளை மறுநாள் ஜார்கண்ட், குஜராத் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

ஹிந்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதாக மத்திய வேளாண் இணையமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் கூறியுள்ளார்.

ஓணம் திருநாளை முன்னிட்டு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மக்களக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மோடி பயணம் 1 (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மற்றும் நாளை மறுநாள் ஜார்கண்ட், குஜராத் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். நாளை ஜார்கண்ட் செல்லும் பிரதமர் காலை 10 மணி அளவில் ஜார்கண்ட் மாநிலம் டாடா நகர் சந்திப்பு ரயில் நிலையத்தில்,

டாடா நகர்-பாட்னா வந்தே பாரத் ரயிலை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். தொடர்ந்து, டாடா நகரில் சுமார் 660 கோடி மதிப்பிலான பல்வேறு ரயில்வே திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் அவர் பூர்த்தி அடைந்த திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். மேலும், ஜார்கண்ட் மாநிலத்தில் பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் பயனாளிகள் 20 ஆயிரம் பேருக்கு அனுமதி கடிதங்களையும் பிரதமர் வழங்குகிறார்.

செப்டம்பர் 16 ஆம் தேதியன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில் காலை 9.45 மணிக்கு பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சார திட்ட பயனாளிகளுடன் அவர் கலந்துரையாட உள்ளார். தொடர்ந்து காந்தி நகரில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் நடைபெறும் 4 ஆவது உலகளாவிய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாடு மற்றும் கண்காட்சியை பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

மோடி பயணம் 2 (11)

பிற்பகல் அகமதாபாத் மெட்ரோ ரயில் திட்டத்தை தொடக்கி வைக்கும் அவர், பிரிவு 1 மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து கிப்ட் சிட்டி மெட்ரோ நிலையம் வரை பயணம் மேற்கொள்கிறார். தொடர்ந்து பிற்பகல் 3 மணி அளவில் அகமதாபாத்தில் சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடக்கி வைத்து அவர்

அடிக்கல் நாட்டுகிறார். 17 ம் தேதியன்று ஒடிசா மாநிலத்திற்கு பயணம் மேற்கொள்ளும் பிரதமர் காலை 11.15 மணிக்கு பிரதமரின் நகர்புற வீட்டுவசதி திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடுகிறார். பின்னர், நன்பகல் 12 மணியளவில் ஒடிசாவின் புவனேஸ்வரில் 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்தவற்றை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

ஹிந்தி தினம் (20)

ஹிந்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். ஹிந்தி தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில், ஹிந்தி மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் விதமான

காணொளியை பகிர்ந்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், 75 ஆண்டு கால சுதந்திர இந்தியாவின் பயணத்தில், ஹிந்தி மற்றும் அனைத்து மாநிலங்களின் அந்தந்த மொழிகளும் மிகவும் முக்கியமானது என்றும், அனைத்து இந்திய மொழிகளுக்கும் ஹிந்தி நட்பு மொழி என்றும் அவர் கூறியுள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், கடந்த10 ஆண்டுகளில் ஹிந்தி மற்றும் உள்ளூர் மொழிகளை வலுப்படுத்த ஏராளமான பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும், பல சர்வதேச மன்றங்களில் பிரதமர் பெருமையுடன் ஹிந்தியில் உரையாற்றி உள்ளார் என்றும் கூறினார். இந்த 10 ஆண்டுகளில் பல இந்திய மொழிகளை வலுப்படுத்த, மத்திய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், புதிய கல்வி கொள்கையில் தாய் மொழியில் ஆரம்ப கல்வியை வழங்குவதற்கு முக்கிய இடம் அளித்ததன் மூலம் நமது அனைத்து மொழிகளுக்கும் ஹிந்திக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி புது வாழ்வு அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

*ஜி-20 மாநாடு 1 (16)*

பிரேசில் குயாபாவில் நடைபெறும் ஜி-20 வேளாண் அமைச்சர்கள் மாநாட்டில் பிரேசிலுக்கான இந்திய தூதர் திரு சுரேஷ் ரெட்டி மற்றும் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் ஆகியோர் பங்கேற்றனர். இக் கூட்டத்தில் உரையாற்றிய

வேளாண் நலத்துறை இணையமைச்சர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதாகவும், உற்பத்தி திறனில் கவனம் செலுத்துவது மட்டும் அல்லாமல், பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, விவசாயிகளின் நலனில் மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சிக்கான விரிவான பார்வையை உள்ளடக்கியது என்று கூறினார்.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காக உலகின் மிகப் பெரிய உணவு அடிப்படையிலான பாதுகாப்பு நிகர திட்டங்களை இந்தியா செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நிலையான மற்றும் வளமான எதிர்காலத்திற்காக நெகிழ் திறன் கொண்ட விவசாய முறைகளை உருவாக்குவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டையும் திரு தாக்கூர் வலியுறுத்தினார்.

ஜி-20 மாநாடு 2 (13)

வளரும் மற்றும் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு வேறுபட்ட அணுகுமுறையின் முக்கியத்துவத்தை அடிக் கோடிட்டு காட்டிய அவர், இந்தியா மற்றும் பிற நாடுகளில் உள்ள மீனவர்களுக்கு அதிகாரமளிப்பதிலும், உலகளாவிய வர்த்தக விவாதங்களில் திறம்பட பங்கேற்க உதவுவதிலும் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இக்கூட்டத்தினை தொடர்ந்து, அமைச்சர்களுடன் உரையாடிய திரு

ராம்நாத் தாக்கூர் மற்ற நாடுகளுடன் இந்தியாவின் வேளாண் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இரு தரப்பு கூட்டங்களை நடத்தினார். உலகளாவிய உணவு முறைகளை எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை எதிர்கொள்ள தேவையான கூட்டு உலகளாவிய முயற்சிகளுக்கு ஒத்துழைக்கவும், கற்றுக்கொள்ளவும், பங்களிக்கவும் இந்தியா தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். ஜி-20 தலைமை பொறுப்பை ஏற்க உள்ள தென்னாப்பிரிக்காவிற்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

*மாண்டவியா* 1 (17)

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் மேற்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 3 ஆவது பிராந்திய கூட்டம் நடைபெற உள்ளது. இதில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு, இளைஞர்கள் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமை தாங்குகிறார். இக் கூட்டத்தில், மேற்கு மாநிலங்கள் மகாராஷ்டிரா குஜராத், மற்றும் யூனியன் பிரதேசங்களான, கோவா, டாமன்-டையூ மற்றும் தாத்ரா ஹவேலி, லட்சத்தீவு பகுதிகளின் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர். தொழிலாளர் சீர்திருத்தங்கள், இ-ஷ்ரம் தேசிய அமைப்ப சாரா தொழிலாளர்கள் தரவு தளம், கட்டிடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் மத்திய அரசும், மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களும் மேற்கொண்டு வரும் முன்

முயற்சிகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இக் கூட்டத்தில் விவாதிக்கப் பட உள்ளது.

கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா, கேரளா, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகிய தென் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன், பெங்களுருவில் முதல் மண்டல கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், இந்திய அரசின் தொழிலாளர் மற்றும்

*மாண்டவியா* 2 (8)

வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து விவாதிக்கப் பட்டது. தொடர்ந்து, பஞ்சாப், சண்டிகர், இமாச்சல பிரதேசம், லடாக், மற்றும் ராஜஸ்தான் ஆகிய வட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் உடனான, 2 ஆவது பிராந்திய கூட்டம் சண்டிகரில் நடைபெற்றது. தொடர்ந்து, நாளை குஜராத்தில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலாளர் திருமதி சுமிதா தவ்ரா, மத்திய மாநில அரசு மற்றும் பங்கேற்கும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் மூத்த அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

ஓணம் வாழ்த்து (20)

ஓணம் திருநாளை முன்னிட்டு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். மலையாள மொழி பேசும் அனைவருக்கும், ஓணம் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். ஓணம் பூக்கோலத்தை போலவே, அனைவரின் வாழ்க்கையும் மலர்ந்து திகழ, இறைவனை தாம் வேண்டிக் கொள்வதாகவும், ஆண்டு முழுவதும், மகிழ்ச்சி மற்றும் செழிப்பை அளிக்கக் கூடியதாக, ஓணம் திருநாள் அமையட்டும் என்றும், அவர் கூறியுள்ளார். மொழி மற்றும் கலாச்சார அடையாளங்களோடு, பாரத தேசத்தின் ஒற்றுமையை முன்னிறுத்தி, அனைவரும் வளர்ச்சி பெறுவோமாக என்றும் அவர் கூறியுள்ளார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இறையுணர்வு, மற்றும், இயற்கையுடன், நமக்குள்ள ஆழமான தொடர்பை எடுத்துக் காட்டும் வகையில்தான் இந்திய பண்டிகைகள் அமைந்து இருப்பதாகவும், அந்த வகையில், மலையாள மக்களின் அறுவடைத் திருநாளாம் ஓணம் பண்டிகை, உறவினர்கள் மற்றும் பிறருடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பாகவே திகழ்வதாகவும் கூறியுள்ளார். ஓணம் அத்தப்பூக் கோலத்தின் அழகிய நறுமணம், அனைவரின் வாழ்விலும்,

ஒற்றுமை, மகிழ்ச்சி, மற்றும் செழிப்பை கொண்டு வந்து சேர்க்கட்டும் என்றும் அவர் கூறியுள்ளார்

மோடி நிவாரணம் (5)

குஜராத் மாநிலம் தேகாமில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இழப்பீடு அறிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு (12)

4 ஆவது தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் கடந்த 11 ஆம் தேதி தொடங்கியது. இதன் நிறைவு நாளான நேற்று பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் இந்தியா, 21 தங்கப் பதக்கங்களுடன் முதலிடம் பிடித்துள்ளது. மேலும், 22 வெள்ளி,5 வெண்கலம் என மொத்தம் 48 பதக்கங்களை கைப்பற்றி உள்ளது.

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் 3 ஆவது சுற்றில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன. ஹங்கேரியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், இந்திய ஆடவர் அணி ஹங்கேரி அணியை

வென்றது. இந்திய மகளிர் அணி 3-க்கு ஒன்று என்ற கணக்கில் ஸ்விட்சர்லாந்து அணியை வென்றது. இன்று மாலை 6.30 மணிக்கு 4 ஆவது இறுதிப் போட்டிகள் புடாபெஸ்ட் -ல் நடைபெறுகின்றன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மற்றும் நாளை மறுநாள் ஜார்கண்ட், குஜராத் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

ஹிந்தி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதாக மத்திய வேளாண் இணையமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் கூறியுள்ளார்.

ஓணம் திருநாளை முன்னிட்டு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் மக்களக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவுபெறுகிறது.